1982 மார்ச் 9]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, கொடுத்திருக்கின்ற தகவல் முழுவதையும் நான் படித்து விட்டேன். இதற்கு பிறகு எனக்குத் தனியாக ஏதாவது செய்தி தெரிந்தால் தான் நீங்கள் கேட்கின்ற கேள்விக்கு நான் பதில் சொல்ல முடியும். இதிலே இருப்பதை வைத்துதான் இப்போது பதில் சொல்ல முடியும். அதிகாரிகள் தவறு செய்தார்கள் என்று வந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் பதிலுக்குப் பின்னர் எந்த விளக்கமும் கேட்பது மரபாகாது.

மாண்புமிகு அவைமுன்னவரின் விளக்கத்திற்குப்பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

3. அறிக்கை அளித்தல்.

துணை வினாவிற்கு அளித்த விடைக்கான திருத்தம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1982-ம் ஆண்டு பிப்ரவரி 4-ம் நாள் அன்று 31-வது வினாவிற்கான துணைவினாவிற்கு அளிக்கப்பட்ட விடைக்கு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திருத்தம் ஒன்றை அளிப்பார்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 4-ம் நாள் அன்று சட்டமன்ற பேரவை வினா எண். 4788 (புதிய எண். 31) விடையளிக்கப்பட்டபோது, சட்டமன்ற உறுப்பினர் திரு. ரா. கிருஷ்ணன் அவர்கள் துணை வினா ஒன்றினை எழுப்பினார். ''பி.எஸ்.ஸி (அக்ரி) மற்றும் பி.இ. டெக்னிகல் குவாலிபிகேஷன் உள்ளவர்கள் புல்லி குவாலிபைடு ஆனவர்கள் என்றும், இதனால் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழுவைப் பொறுத்தவரையில் அவர்களைத் தேர்ந்தெடுக்க முடிவு செய்வதற்கு அங்கே ஒன்றும் இல்லை என்றும், ஒரு சினியாரிட்டி பேசிசில் அவர்களை அப்பாயின்ட் செய்ய அரசு முன்வருமா?''

இதற்கு விடையளிக்கையில், ''அப்படித்தான் இப்போது ஏற்பாடு செய்யப்படுகிறது'' என்று கூறினேன். அதைக் கீழ்க் கண்டவாறு திருத்தி ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

வேளாண்மை அலுவலர்கள், உதவிப் பொறியாளர்கள் (வேளாண்மை/ பொறியியல்) பதவிகளுக்கு முறையே பி.எஸ்.ஸீ (வேளாண்மை) பி.இ. பட்டப்படிப்பு படித்தவர்கள் தகுதி வாய்ந்தவர்கள் ஆவார்கள். இப்பதவிகள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழுவின் வரம்பிற்குட்பட்டவை. தமிழ்நாடு வேளாண்மை விரிவாக்கப் பணி சிறப்பு விதி மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் பணிச்சிறப்பு விதிகளின் படி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் உதவிப் பொறியாளர்கள் (வேளாண்மைப் பொறியியல்) பதவிகளுக்கு நியமனம் செய்டத் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழுவின் மூலம் நேரடி முறையில் தேர்வு செய்யப்படுகிறது. மேற்கூறிய பதவிகள் தொழில் நுட்பப் பதவிகளாக இருப்பதால் எழுத்துத் தேர்வு நடைபெறுவதில்லை. ஆனால் பணி ''வேட்பாளர்களை தேர்ந்தெடுக்க வாய்மொழித் தேர்வு நடத்தப் படுகிறது''.

''தமிழ்நாடு அரசு மற்றும் சார்நிலைப் பணிகளில் பொது விதிகளின் விதி 22-ன் கீழ், ஒதுக்கீடு விதியைப் பின்பற்றி வாய் மொழி தேர்வு மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாடு தேர்வாணைக் குழுவால் முதுநிலை நிர்ணயம் செய்யப் படுகிறது. எனினும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவினால் தேர்வு செய்யப்பட்டு முறைப்படுத்தப்பட்டவர்கள் இல்லாவிட்டால், தமிழ்நாடு வேளாண்மை விரிவாக்கப்பணி மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் பணிச்சிறப்பு விதிகளில் குறிப்பிட்ட தகுதிகளின் அடிப்படையில் வேளாண்மை அலுவலர்கள் மற்றும் உதவிப் பொறியாளர்கள் பதவிகளுக்குத் தற்காலிக நியமனங்கள் வேலை வாய்ப்பகம் மூலம் செய்யப் படுகிறது. தேர்வாணைக்குழுவினால் தேர்வு செய்யப்பட்டவர் களின் பட்டியல் கிடைக்கப்பெற்றவுடன் அவர்கள் மாற்றப்படு வார்கள் ''

TRUTH ALONE TRIUMPHS

4. கவனி ஈர்ப்புகள்.

அ. சேலம் செவிலியர் பயிற்சிப் பள்ளி மூடப்பெற்றது.

திரு. செ. செம்மலை : துணைத்தலைவர் அவர்களே, ''சேலத்தில் நடைப்பெற்று வந்த செவிலியர் பயிற்சிப் பள்ளி திடீரென்று மூடப்பட்டது குறித்து'' அவசரப் பொது முக்கியத்து வம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : துணைத்தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.